**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE'S, HOSUR.**

SC. 48/2020 தேதி 18.09.2025

அ.சா. 10 – **S. பாலகிருஷ்ணன் , காவல் துணை கண்காணிப்பாளர், பென்னாகரம், தர்மபுரி மாவட்டம் .**

**( எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**அ.சா. 10 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. புலன் விசாரணைக்காக இவ்வழக்கின் கோப்புகளை நான் கடந்த 14.10.2019 ம் தேதியில் பெற்றுகொண்டேன் என்றால் சரிதான். கோப்புகளை பெற்று ஆவணங்களை பார்வையிட்டேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை U/s 294(b), 324, 506(ii) இதச வின் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை 05.10.2019 ம் தேதி பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அன்றைய தினமே பட்டியல் சாட்சி 1 முதல் 8 வரையான சாட்சிகளை காவல் உதவி ஆய்வாளர் திரு. ராஜசேகரன் அவர்கள் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதேபோல் கடந்த 14.10.2019 ம் தேதியில் மருத்துவர் திருமதி, ஆயிஷா சுல்தானா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். 14.10.2019 ம் தேதி காவல் உதவி ஆய்வாளர் திரு. ராஜசேகரன் என்பவர் வாதியான சாட்சி சண்முகம் என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அன்றைய தினமே காயச்சான்றையும் பெற்று , இவ்வழக்கில் U/s 294(b), 326, 307 இதச வாக சட்டபிரிவாக மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். சம்பவம் நடைபெற்று 09 நாட்கள் கழித்து , அ.சா 1 யிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 14.10.2019 ம் தேதியில் அ.சா 1 ன் மறு வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் இதச பிரிவு 307 சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 14.10.2019 ம் தேதி மருத்துவரை விசாரித்து விட்டு 19.10.2019 ல் தான் பெறப்பட்டுள்ளதாக காயச்சான்றில் உள்ளது என்றால் சரியல்ல. நான் கடந்த 15.10.2019 ம் தேதியில் மெய்யப்பன் என்கிற சந்துரு , மகாலட்சுமி , கல்யாண குமார், ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த

வாக்குமூலங்களில் சான்று பொருட்களை நான் காட்டி விசாரிக்கவில்லை காரணம் , சான்று பொருட்கள் ஏற்கனவே காவல் உதவி ஆய்வாளர் மூலமாகவே நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டது. மெய்யப்பனுக்கு வழங்கப்பட்ட காயச்சான்றில் எலும்புமுறிவு ஏற்பட்டதாக உள்ளது அதில் வெட்டுக்காயம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சாட்சி சண்முகத்திற்கு மேல் சிகிச்சை பெறும் அளவிற்கு காயம் இல்லை என்றாலும் வழக்கை பெரிது படுத்த வேண்டும் என்பதற்காக அரசு மருத்துவமனையில் இருந்து குணம் மருத்துவமனைக்கு சென்றுள்ளார் என்றால் சரியல்ல. நான் குணம் மருத்துவமனை மருத்துவர்களை விசாரிக்கவில்லை ஆவணங்கள் எதுவும் பெறவில்லை. இவ்வழக்கின் சம்பவமானது எனது விசாரணையில் வாழைமரத்தில் இருந்து 4 அடி தூரத்தில் சம்பவம் நடந்ததாக சாட்சிகள் எதுவும் சொல்லவில்லை. ஆனால், வாதியின் கம்பெனி அருகே நடந்ததாக கூறியுள்ளார்கள். அந்த வாழைமரமும் அந்த கம்பெனி அருகே தான் உள்ளது. வாழைமரம் வெட்டப்பட்டதாக தயார் செய்யப்பட்ட பார்வை மகஜரில் குறிப்பு எதுவும் இல்லை ஆனால் , வாழைமரங்கள் உள்ளது என குறிப்பிட்டுள்ளார். மாதிரி வரைபடத்தில் சான்று பொருள் சம்பவ இடத்தில் உள்ளது போல் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைபடம் தயார் செய்து 1.30 மணிநேரம் கழித்து கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முதலாவது சட்ட மாறுதல் அறிக்கை பெற்றவுடன் , காயச்சான்றிதழ்களை கொடுத்த மருத்துவரை விசாரித்து CT scan, X Ray மற்ற ஆவணங்களையும் பெற்று அவரையும் விசாரித்து அந்த ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. சாட்சிகள் மறுவாக்குமூலம் நான் சொன்னது போல் சாட்சிகளிடம் இருந்து பெறவில்லை என்றாலும், அதை நானே தயாரித்து கொண்டேன் என்றாலும் சரியல்ல. சாட்சி சண்முகம் , மெய்யப்பன், மகாலட்சுமி, கல்யாணகுமார் ஆகியோர் கொடுத்த வாக்குமூலங்களில் உள்ளவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா 1 சம்பவ இடத்தில் இருந்த வேப்பமரத்தில் ஏறி கிளைகளை வெட்டிக்கொண்டிருக்கும் போது தவறுதலாக அவருக்கு காயம் ஏற்பட்டது என்றாலும், அவர் மேலே வைத்திருந்த கத்தி கீழே விழுந்து அதனால் அவரது தந்தைக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சான்று பொருள் புகார்தாரே தயாரித்து கொடுத்தது என்றால் சரியல்ல. எதிரிக்கும் சான்று

பொருளுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. நான் சரியாக புலன் விசாரணை செய்திருந்தில், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்பது தெரியவந்திருக்கும் என்றால் சரியல்ல. காவல் உதவி ஆய்வாளர் தயாரித்து வைத்த ஆவணத்தை வைத்து சரவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Subordinate Judge,
Hosur